"இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.86,72,11,000/–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப் பெறுகின்றது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் 18–7–2017 (செவ்வாய்க்கிழமை) காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 4–38 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

11. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

35. 2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு தகவல் ஆணைய பணி விதிகளை இயற்றியது குறித்து பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (நி.சீ.3) துறையின் 23–2–2017 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 27–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2005 ஆம் ஆண்டு தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 22/2005) 29(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

36. 2013–2014 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ்–ஆங்கிலம்)

37. 2014–2015 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள்

2017 ஜூலை 14]

சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ்–ஆங்கிலம்)

38. 2015–2016 ஆம் ஆண்டிற்கான அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தின் முப்பத்தெட்டாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் [மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ்–ஆங்கிலம்)

39. 2015–2016 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மீன் வளப் பல்கலைக்கழகத்தின் ஆண்டு நிதிக் கணக்குகள் மற்றும் தணிக்கை அறிக்கை. [2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு மீன் வளப் பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/2012) 37(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ்–ஆங்கிலம்)

40. 2015–2016 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மீன் வளப் பல்கலைக்கழகத்தின் மூன்றாவது ஆண்டறிக்கை. [2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு மீன் வளப் பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/2012) 52(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

175. மானியக் கோரிக்கை எண் 28–செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2017–2018. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

176. மானியக் கோரிக்கை எண் 30–எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2017–2018. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

177. மானியக் கோரிக்கை எண் 46–தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2017–2018. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

178. மானியக் கோரிக்கை எண் 47–இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2017–2018. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

179. "தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் நலத் திட்டங்கள் மற்றும் செயல்பாடுகள்" என்கிற சிறுநூல். (தமிழ்)

[2017 ஜூலை 14

180. தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திற்கான பதிலுரையின்போது மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2017–2018. (தமிழ்)

181. பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை மானியக் கோரிக்கையின்மீதான விவாதத்திற்கான பதிலுரையின்போது மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2017–2018. (தமிழ்)

182. பொதுக் கணக்குக் குழுவின் இருபத்தொன்றாவது அறிக்கை. (2016–2018)

183. பொதுக் கணக்குக் குழுவின் இருபத்திரெண்டாவது அறிக்கை. (2016–2018)

184. பொதுக் கணக்குக் குழுவின் இருபத்தி மூன்றாவது அறிக்கை. (2016–2018)

185. பொதுக் கணக்குக் குழுவின் இருபத்தி நான்காவது அறிக்கை. (2016–2018)

186. அரசு உறுதிமொழிக் குழுவின் முதலாவது அறிக்கை. (2016–2018)

187. அரசு உறுதிமொழிக் குழுவின் இரண்டாவது அறிக்கை. (2016–2018)

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS